**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 495/2021</u>**
**<u>வழக்கு சாட்சி PW-4</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயலட்சுமி | தாலுகா | : | ஆலங்குளம் |
| தந்தை பெயர் | : | இசக்கிமுத்து | தொழில் | : | பீடி சுற்றுதல் |
| கிராமம் | : | குத்தபாஞ்சான் | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 31st, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் குத்தபஞ்சானில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சாட்சி சேர்மன் என்னுடைய கணவர். சாட்சி இசக்கி என்னுடைய தம்பி. 01.09.2018 அன்று எதிரிகள் என்னுடைய வீட்டிற்கு வந்தார்கள். "உன் புருஷனை எங்கே" என்று கேட்டார்கள். நான் எதற்கு என்று கேட்டபோது, "உன் புருஷனை துண்டு துண்டாக வெட்ட போறோம்" என்று சொன்னார்கள். 2 பேரும் அரிவாள் வைத்திருந்தார்கள்.

அப்போது, மதியம் 02.30 மணி இருக்கும். நாங்களும், எதிரிகளும் ஊருக்குள் பால்வியாபாரம் செய்து வருகிறோம். நாங்கள் ஒரு லிட்டர் ரூ.25/-க்கு வாங்குவோம். எதிரிகள் ரூ.23/-க்கு வாங்குவார்கள். அதனால் வியாபார போட்டி இருந்தது. நான் என்னுடைய கணவரை எதுவும் செய்யக்கூடாது என்று கையெடுத்து கும்பிட்டேன். பின்னர் அவர்கள் சென்றார்கள். நான் வீட்டிலிருந்து வடக்கு தெருவிற்கு வந்தேன்.

பிள்ளையார் கோவிலின் முன்பு என்னுடைய தம்பியின் கையை எதிரிகள் வெட்டி போட்டு விட்டு சென்றார்கள். நான் செல்வதற்குள் என்னுடைய தம்பியின் கையை எதிரிகள் வெட்டினார்கள். நான் அழுதேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

என்னுடைய தம்பியின் நாடார் ஏ.பி.நாடானூர் என்றால் சரிதான். என்னுடைய ஊரிலிருந்து ஏ.பி.நாடானூர் 10 கி.மீ தூரத்தில் உள்ளது. என்னுடைய தம்பி என் வீட்டிற்கு வந்து செல்வார் என்றால் சரியல்ல. என் வீட்டில் 4 வருடங்கள் இருந்தார். என்னுடைய கணவர் டி.வி.எஸ் எக்ஸ்-எல் வாகனமும், பிளாட்டினா வாகனமும் வைத்திருந்தார் என்றால் சரிதான். டி.வி.எஸ் எக்ஸ்-எல் வாகனத்தில் எங்கள் ஊருக்குள் வீடுகளிலிருந்து பால் கொள்முதல் செய்வார் என்றால் சரிதான்.

பிளாட்டினா வாகனத்தில் 40 லிட்டர் கேன் வைத்து ஓட்டுவார் என்றால் சரிதான். பிளாட்டினா பைக்கில் 40 லிட்டர் கேன் வைத்து திருநெல்வேலிக்கு செல்வார் என்றால் சரிதான். என் கணவர் மதியம் 01.00 லிருந்து 02.00 மணிக்குள் ஊரிலுள்ள மாடுகளில் இருந்து பால் கறக்க செல்வார் என்றால் சரிதான். 02.00 மணிக்கு பஞ்சாயத்து போர்டு தெருவில் உள்ள வீட்டில் என் கணவர் பால் கறப்பார் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் என் கணவர் ஊருக்குள் பால் கறந்து விட்டு டி.வி.எஸ் எக்ஸ்-எல் வாகனத்தில் வந்தார் என்றால் சரிதான். என்னுடைய தம்பியின் நடத்தைகள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் என்

வீட்டிற்கு வந்து "உன் புருஷனை துண்டு துண்டாக வெட்ட போறோம்" என்று என்னிடம் சொன்னதாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் 2 பேரும் அரிவாள் வைத்திருந்ததாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் செல்போன் வைத்திருந்தேன். நான் எதிரிகள் மிரட்டியதாக என் கணவருக்கோ, தம்பிக்கோ சொன்னேனா? என்றால் இல்லை. நேரடியாக சென்றேன். நான் சம்பவயிடத்திற்கு வருவதற்கு முன்பாகவே சம்பவம் நடந்திருந்தது என்றால் சரிதான். எதிரிகள் இருவரும் என் தம்பியின் கையை வெட்டியதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

நான் மருத்துவமனைக்கு என் தம்பியை அழைத்து செல்லவில்லை. என் தம்பியின் காயத்திலிருந்து வந்த இரத்தம் என் ஆடையில் படவில்லை. ஆம்புலன்சில் நானும், என் கணவரும் என் தம்பியுடன் சென்றோம். மருத்துவமனையில் என் தம்பி சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரிதான். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மருத்துவர் கேட்டபோது, தெரிந்த ஒரு நபர் தம்பியை தாக்கி காயம் ஏற்பட்டதாக சொன்னேன்.

1ம் எதிரி கெவிலிகுமார் வெளியூரிலிருந்து வந்து எங்கள் ஊரில் தங்கியிருந்ததினால், அவரை ஊரை விட்டு காலி செய்ய வேண்டும் என்று ஊரில் உள்ளவர்கள் பேசினார்கள் என்றால் சரிதான். எதிரி செல்லக்குட்டி 1ம் எதிரி காலி செய்ய முடியாது என்று கூறினார் என்றால் சரிதான்.

அதனால் எங்கள் சமுதாயத்தினர் எதிரிகள் மீது கோபத்தில் இருந்தார்கள் என்றால் சரியல்ல.

நான் சொன்ன மாதிரி, சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தம்பி அ.சா.1 க்கு வேறு விதத்தில் கீழகுத்தபஞ்சான் கிராமத்தில் வைத்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் மீது ஊரில் உள்ள நாட்டாமைகளின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.01 18:26:25 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 495/2021</u>
<u>வழக்கு சாட்சி PW-5</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கொடிரோஜா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | திரவிய நாடார் | தொழில் | : | பீடி சுற்றுதல் |
| கிராமம் | : | நாடானூர் | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 31st, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் நாடானூரில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு என் மகனின் கையை வெட்டிய போது தான் தெரியும். 01.09.2018 அன்று என்னுடைய மகள் எனக்கு போன் மூலம் சண்டை நடந்ததாக கூறினார். செல்லக்குட்டியும், கொப்புளகுமாரும் என்னுடைய மகன் இசக்கிராமகிருஷ்ணனை வெட்டியதாக நான் கேள்விபட்டேன். நான் குத்தபஞ்சான் வந்தேன். அங்கு என் மகன் இல்லை. என்னுடைய மகனை திரவியம் மருத்துவமனைக்கு என்னுடைய மகளும், மருமகனும் கொண்டு சென்றதாக கேள்விபட்டேன். திரவியம் மருத்துவமனையில் நான் சென்று என் மகனை பார்த்தேன். என்னுடைய மகனின் கை வெட்டப்பட்டு, துண்டானதாக பார்த்தேன். போலீசார் மறுநாள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** –

நான் திரவியம் மருத்துவமனைக்கு சாயங்காலம் 05.00 மணியளவில் சென்றேன். என்னுடைய மகனை பார்க்கவிவடவில்லை. நான் சம்பவத்திற்கு மறுநாள் தான் என் மகனை நான் பார்த்தேன். நான் சம்பவத்தை கேள்விபட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2025.08.01 18:26:38 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 495/2021**
**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பச்சைமால் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இராமையா நாடார் | தொழில் | : | எலக்ட்ரீசியன் |
| கிராமம் | : | குத்தபாஞ்சான் | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 31st, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் குத்தபாஞ்சானில் குடியிருந்து வருகிறேன். நான் எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி செல்லக்குட்டியை எனக்கு தெரியும். சாட்சி இசக்கியை தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். போலீசார் கேட்டுக்கொண்டதினால் என்னுடைய ஊரான குத்தபாஞ்சானில் வைத்து போட்டு கொடுத்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.01 18:26:46 +0530